# தமிழகப் பழங்குடிகள்

## வரலாறு சமூகம் பண்பாடு

முதன்மைப் பதிப்பாசிரியர்
முனைவர் ச. அரிச்சந்திரன்

தொகுதி - 2



பதிப்பாசிரியர்
முனைவர் ஆ. சரவணன்

தமிழகப் பழங்குடிகள்; வரலாறு சமூகம் பண்பாடு

(தேசியக் கருத்தரங்கம்)

முதன்மைப் பதிப்பாசிரியர் : **முனைவர் ச. அரிச்சந்திரன்**
பதிப்பாசிரியர் : **முனைவர் ஆ. சரவணன்**
பதிப்புரிமை : **முனைவர் ச. அரிச்சந்திரன்**
முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2018
வெளியீடு : **தமிழ்த்துறை (சுயநிதிப்புலம்)**
**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**
கோயம்புத்தூர் - 641 029.
கணினியாக்கம் : பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29.
அச்சாக்கம் : பிரடாக் பிரிண்ட்,
476, பூமாதேவி கோவில் அருகில்
கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)
கோயம்புத்தூர் - 29.
அலைபேசி : 98432 73994, 91505 91017
பக்கங்கள் : XXVIII + 430 = 458
விலை : உரூ. 400/-

**ISBN : 978 - 93 - 80800 - 88 - 2**

**Tribes of Tamil Nadu ; History Society and Culture**

Chief Editor : **Dr. S. Arichandran**
Editor : **Dr. A. Saravanan**
Copyright's : **Dr. S. Arichandran**
First Edition : August, 2018
Published : **Department of Tamil (SF)**
**Kongunadu Arts and Science College**
Coimbatore - 641 029.
Computer : **Prdag Print**, Coimbatore - 29.
Printing at : **Prdag Print**
476, Near Boomadevi Kovil
G.N. Mills (Po), Coimbatore - 29.
Cell : 98432 73994, 91505 91017
Pages : XXVIII + 430 = 458
Prize : **Rs. 400/-**

SUDA

Tel : (

117. படுகர் வழிபாட்டில் இருளர் மற்றும் குறும்பர்களின் முக்கியத்துவம் 763
**முனைவர் சி. ரத்தீஷ்**

118. கோத்தர்களின் பண்பாட்டு மரபுகள் 766
**சரஸ்வதி**

119. பணியர்களின் வாழ்வியல் 771
**முனைவர் ஆ. சரவணன்**

120. கண்ணப்ப நாயனார் புராணத்தில் பழங்குடியின பண்பாடு 778
**முனைவர் சு. சதீஷ்குமார்**

121. Survey and Documentation of Ethnomdicinal Plants Used by Paniya Tribes In Padanthorai Village, Gudalur Taluk, Nilgiri District, Tamilnadu. 785
**Jency, S. Jagathes Kumar and V. Balasubramaniam**

122. Genetic Diversity of Indian tribes: an insight into the disease resistance 797
**D. Guruprasad, A.Selvapriya, L Surendran, Dr.P.Senthilkumar, R.Ranjithkumar**

123. குருமன்ஸ் சேவையாட்டம் 798
**கலைஞன் மணி சிவ. பரமசிவம்**

124. குருமன் பழங்குடி மக்களின் புராதனப் பொதுவுடைமைச் சமுதாய வாழ்வியல் முறைகள் 800
**சி. சொக்கலிங்கம்**

125. குறுமன்ஸ் பழங்குடியினரின் மூதாதையர் வழிபாடு 806
**முனைவர் அ. இந்துமதி**

126. குறவர் மற்றும் குன்னுவர் வாழ்க்கை முறைகள் 810
**கு. அரிகரசுதன்**

127. வரலாற்றியல் நோக்கில் குறும்பர் இன மக்கள் வாழ்வும் மரபும் 815
**இரா. வீரமணி**

128. குறும்பர் பழங்குடி வழிபாட்டில் வெளிப்படும் இயற்கை உயிர்ப்பாற்றல் 820
**முனைவர் சு. சிவசந்திரகுமார்**

129. படுகர் மக்களின் மரபுசார் புழங்குபொருட்கள் 825
**ஆறு. செல்வமணி**

# 120. கண்ணப்ப நாயனார் புராணத்தில் பழங்குடியின பண்பாடு

**முனைவர் சு. சதீஷ்குமார்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் - 641 029.

## முன்னுரை

ஒவ்வொரு காலகட்டத்திலும் தமிழகத்தில் தோன்றி வாழ்ந்த மக்களின் வரலாற்றினையும் பண்பாட்டினையும் வாழ்வியல் நெறிகளையும் ஆய்ந்துணர்ந்து சான்றோர்கள் பலர் நூல்களை இயற்றியுள்ளனர். இத்தகைய நூல்களில் தமிழக மக்களின் வரலாற்று நூலாகவும் சைவத் திருமுறைகளில் பன்னிரண்டாம் திருமுறையாகவும் விளங்குவது தெய்வச் சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் வரலாறாகிய பெரியபுராணம். நூற்சிறப்பாலும் நூற்பொருளின் பெருமையாலும் குறிக்கோள் மிகுந்த திருத்தொண்டர்களைப் பற்றிய வரலாற்றினைக் கூறும் உயர்வாலும் சைவ உலகமும் ஆராய்ச்சி அறிஞர்களும் இலக்கியச் சுவைஞர்களும் ஏற்றுப் போற்றுகின்ற நூலாக இந்நூல் திகழ்கின்றது. பெரியபுராணத்தில் இரண்டாவது சருக்கத்தில் இடம்பெற்றுள்ள கண்ணப்ப நாயனார் புராணத்தில் இடம்பெற்றுள்ள பழங்குடியினரின் பண்பாட்டை ஆய்ந்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

## குடியிருப்பு

வேடர்கள் தங்களது குடியிருப்புகளை விளா மரங்கள் சூழ்ந்த இடங்களில் அமைத்திருந்தனர். 'விளாமரச் சூழலின் காற்று உடல்சுகம் தருவதோடு அவை இவர்களது முயற்சியின்றியே இயல்பின் வளர்ந்து பலன் தருவன. அவற்றின் பழங்கள் சுகந்தரும் உணவாதலும் காண்க' (திருத்தொண்டர் புராணம், இரண்டாம் பாகம், கண்ணப்ப நாயனார் புராணம், சிவக்கவிமணி உரை, ப.831). தங்களது குடிலுக்கு முன் உள்ள விளா மரங்களின் மேற்கொம்புகளில் வார்வலைகளைத் தொங்கவிடும் பழக்கம் இருந்ததை,

> *'வன்றிரள் விளவின் கோட்டு வார்வலை மருங்கு தூங்க' (திரு.பு., க.நா.பு., பா. 3)*

என்பதனால் அறியமுடிகிறது.

## வேடர்களின் உணவுகள்

சமைத்தல் தொழிலில் கைதேர்ந்தவர்களாக வேடர்கள் விளங்கினர். ஐவனம் என்னும் நெல், வெவ்வேறு வகையான புல்லரிசி, அடர்ந்த மலைகளில் விளைந்த தினை, மூங்கிலரிசி ஆகியவற்றால்